மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026 ம் ஆண்டு மார்ச் 02 ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.03.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் எதற்காக இந்த வழக்கு நடக்கிறது என்ற விவரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வீடு வாதியின் அப்பாவிற்கும், அத்தைக்கும் மட்டும் இருந்ததை வாதி தனக்கும் பாகம் வேண்டும் என்று கேட்கிறார். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் பழனிச்சாமி என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. நான் அய்யம்பாளையம் ஊரைச் சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான் பக்கத்து ஊரான குமராண்டி சாவடி ஊரைச் சார்ந்தவர். வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு நான் உறவினர்கள் அல்ல என்றால்

சரிதான். உபயவாதிகளின் உறவினர்கள் அய்யம்பாளையத்தில் உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு என்ன தொழில் என்றால் நெசவு தொழில் செய்து வருகிறேன். எனக்கு அய்யம்பாளையத்தில் உறவினர்கள் யாரும் இல்லை என்றால் ஆமாம்.வழக்கு சொத்தின் கதவு எண் மற்றும் காலை எண் ஆகியவை பற்றி எனக்கு தெரியாது. என்றால் ஆமாம்.

3. பழனிச்சாமி பெயரில் வழக்கு சொத்திற்கான பட்டா வாங்கப்பட்டுள்ளதை நான் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை பழனிச்சாமி அய்யம்பாளையத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்து 1, 2 பிரதிவாதிகளை வளர்த்தார் என்றால் சரிதான். பழனிச்சாமி என்பவரின் ஆதி சொந்த ஊர் இடைக்காட்டு வலசு என்றால் சரிதான் பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனார் இடைக்காட்டு வலசில் தான் குடியிருந்து வந்தார் என்றால் அவர் அங்கிருந்து அய்யம்பாளையத்திற்கு வந்தார். எப்போது பழனிச்சாமி கவுண்டரின் தகப்பனார் அய்யம்பாளையம் கிராமத்திற்கு வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. ரவி கரட்டுப்பாளையம் சென்று சுமார் 20 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். ரவி கரட்டுப்பாளையத்தில் தான் குடும்பத்துடன் குடியிருக்கிறார் என்றால் ஆமாம். கலைச்செல்வி தான் அய்யம்பாளையத்தில் இந்த வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். நான் வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் சுப்பராய கவுண்டர் மாரியப்ப கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியோர்கள் ஒரே குடும்பமாக அய்யம்பாளையத்தில் வசித்து வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. எனக்கும், வாதி குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் உறவும் இல்லை என்றும், எனக்கு அய்யம்பாளையத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் வேண்டுமென்றே வாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் இந்த வழக்கில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வயது 60. பழனிச்சாமி மற்றும் மாரியப்ப கவுண்டர் ஆகியவர்கள் எந்த தேதியில் இறந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். எனது சாட்சியம் பொய்யானது என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.02 18:34:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்